ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி
# 2.8 – திரிபுரம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 2.8 – திரிபுரம்

‡ திரிபுரம் மூன்றெரித்தானும் ⋆
மற்றை மலர்மிசை மேல் அயனும் வியப்ப ⋆
முரி திரை மா கடல் போல் முழங்கி ⋆
மூவுலகும் முறையால் வணங்க ⋆
எரியன கேசர வாள் எயிற்றோடு ⋆
இரணியன் ஆகம் இரண்டு கூறா ⋆
அரி உருவாம் இவர் ஆர் கொல் என்ன ⋆
அட்டபுயகரத்தேன் என்றாரே ‖ **2.8.1** ‖

வெம் திறல் வீரரில் வீரர் ஒப்பார் ⋆
வேதம் உரைத்திமையோர் வணங்கும் ⋆
செந் தமிழ் பாடுவார் தாம் வணங்கும் ⋆
தேவர் இவர் கொல் தெரிக்க மாட்டேன் ⋆
வந்து குறள் உருவாய் நிமிர்ந்து ⋆
மாவலி வேள்வியில் மண் அளந்த ⋆
அந்தணர் போன்றிவர் ஆர் கொல் என்ன ⋆
அட்டபுயகரத்தேன் என்றாரே ‖ **2.8.2** ‖

செம் பொன் இலங்கு வலங்கை வாளி ⋆
திண் சிலை தண்டொடு சங்கம் ஒள் வாள் ⋆
உம்பர் இரு சுடர் ஆழியோடு ⋆
கேடகம் ஒண் மலர் பற்றி எற்றே ⋆
வெம்பு சினத்தடல் வேழம் வீழ ⋆

வெண் மருப்பொன்று பறித்து ⋆
இருண்ட அம்புதம் போன்றிவர் ஆர் கொல் என்ன ⋆
அட்டபுயகரத்தேன் என்றாரே ॥ **2.8.3** ॥

மஞ்சுயர் மா மணிக் குன்றம் ஏந்தி ⋆
மா மழை காத்தொரு மாய ஆனை அஞ்ச ⋆
அதன் மருப்பன்று வாங்கும் ⋆
ஆயர் கொல் மாயம் அறிய மாட்டேன் ⋆
வெஞ்சுடர் ஆழியும் சங்கும் ஏந்தி ⋆
வேதம் முன் ஓதுவர் நீதி வானத்து ⋆
அஞ்சுடர் போன்றிவர் ஆர் கொல் என்ன ⋆
அட்டபுயகரத்தேன் என்றாரே ॥ **2.8.4** ॥

கலைகளும் வேதமும் நீதி நூலும் ⋆
கற்பமும் சொற் பொருள் தானும் ⋆
மற்றை நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் ⋆
நீர்மையினால் அருள் செய்து ⋆
நீண்ட மலைகளும் மா மணியும் ⋆
மலர்மேல் மங்கையும் சங்கமும் தங்குகின்ற ⋆
அலை கடல் போன்றிவர் ஆர் கொல் என்ன ⋆
அட்டபுயகரத்தேன் என்றாரே ॥ **2.8.5** ॥

எங்ஙனும் நாம் இவர் வண்ணம் எண்ணில் ⋆
ஏதும் அறிகிலம் ஏந்திழையார் ⋆
சங்கும் மனமும் நிறைவும் எல்லாம் ⋆
தம்மன ஆகப் புகுந்து ⋆
தாமும் பொங்கு கருங்கடல் பூவை காயாப் ⋆
போதவிழ் நீலம் புனைந்த மேகம் ⋆

அங்ஙனம் போன்றிவர் ஆர் கொல் என்ன ⋆
அட்டபுயகரத்தேன் என்றாரே ‖ **2.8.6** ‖

முழுசி வண்டாடிய தண் துழாயின் ⋆
மொய்ம் மலர்க் கண்ணியும் ⋆
மேனியம் சாந்திழிசிய கோலம் இருந்தவாறும் ⋆
எங்ஙனஞ்சொல்லுகேன் ! ஓவி நல்லார் ⋆
எழுதிய தாமரை அன்ன கண்ணும் ⋆
ஏந்தெழில் ஆகமும் தோளும் வாயும் ⋆
அழகிய தாம் இவர் ஆர் கொல் என்ன ⋆
அட்டபுயகரத்தேன் என்றாரே ‖ **2.8.7** ‖

மேவி எப்பாலும் விண்ணோர் வணங்க ⋆
வேதம் உரைப்பர் முந்நீர் மடந்தை தேவி ⋆
அப்பால் அதிர் சங்கம் இப்பால் சக்கரம் ⋆
மற்றிவர் வண்ணம் எண்ணில் ⋆
காவி ஒப்பார் கடல் ஏயும் ஒப்பார் ⋆
கண்ணும் வடிவும் நெடியராய் ⋆
என் ஆவி ஒப்பார் இவர் ஆர் கொல் என்ன ⋆
அட்டபுயகரத்தேன் என்றாரே ‖ **2.8.8** ‖

தஞ்சம் இவர்க்கென் வளையும் நில்லா ⋆
நெஞ்சமும் தம்மதே சிந்தித்தேற்கு ⋆
வஞ்சி மருங்குல் நெருங்க நோக்கி ⋆
வாய் திறந்தொன்று பணித்ததுண்டு ⋆
நஞ்சம் உடைத்திவர் நோக்கும் நோக்கம் ⋆
நான் இவர் தம்மை அறியமாட்டேன் ⋆

அஞ்சுவன் மற்றிவர் ஆர் கொல் என்ன ⋆
அட்டபுயகரத்தேன் என்றாரே ॥ **2.8.9** ॥

‡ மன்னவன் தொண்டையர் கோன் வணங்கும் ⋆
நீள் முடி மாலை வயிரமேகன் ⋆
தன் வலி தன் புகழ் சூழ்ந்த கச்சி ⋆
அட்டபுயகரத்தாதி தன்னை ⋆
கன்னி நன் மா மதிள் மங்கை வேந்தன் ⋆
காமரு சீர்க் கலிகன்றி ⋆
குன்றா இன் இசையால் சொன்ன செஞ்சொல் மாலை ⋆
ஏத்த வல்லார்க்கிடம் வைகுந்தமே ॥ **2.8.10** ॥

அடிவரவு — திரிபுரம் வெந்திறல் செம்பொன் மஞ்சு கலைகளும் எங்ஙனும் முழுசி மேவி தஞ்சம் மன்னவன் சொல்லு

திரிபுரம் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்